
## மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

**சிறிய அளவிலான உயிர்க்கூழ்ம முறையில் மீன் வளர்ப்பு**


என்ன முருகா நல்லா இருக்கியா...
நல்லா இருக்கேன்னே... நீங்க எப்படி இருக்கிங்க
எனக்கென்ன முருகா, புதுசா மீன் பண்ணை வச்சு நல்ல வருமானம் வருவதனால இப்ப நல்லாவே இருக்கேன்
நல்லது அண்ணே...உங்க மாதிரி எனக்கும் நிலம் இருந்திருந்தால் நானும் உங்கள மாதிரி மீன் பண்ணை வச்சுருப்பேன்.
அதுக்கென்ன முருகா. சின்ன இடத்திலே மீன் வளர்க்கிற மாதிரி அரசு நிறைய திட்டங்களை வச்சு இருக்காங்கல
அப்படியா அண்ணே அத பத்தி விளாவாரியாக சொல்லுங்கனே. நானும் தெரிஞ்சுக்கிறேன்.

முருகா சொல்றேன் கேளு, சிறிய
அளவிலான உயிர்கூழ்ம முறை
மீன் வளர்ப்பு திட்டம் அரசு
செயல்படுத்திட்டு வராங்க.
அதில், ஓர் அலகிற்கான மொத்த
தொகை ரூ. 7.50 இலட்சத்தில்,
பொதுப் பிரிவினருக்கும் 40%
மானியத் தொகையாக ரூ. 3
இலட்சம்,
ஆதிதிராவிடர்/பழங்குடியினர்
மற்றும் பெண்களுக்கு 60%
மானியத் தொகையாக ரூ. 4.50
இலட்சமும் வழங்கப்படுகிறது



அண்ணே இந்த திட்டம்
அருமையா
இருக்குண்ணே.... எனக்கு
இருக்கிற சின்ன இடத்தில
புதிய தொழில்நுட்பம் மூலம்
மீன் வளர்த்து நல்ல
வருமானம் ஈட்டலாம்
போலயே...



ஆமாம் முருகா….. தமிழ்நாடு அரசு
விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும்
வருமானத்தை பெருக்குவதற்கு
நிறைய திட்டங்கள் கொண்டு
வந்துருக்காங்க!!! மீன்வள
அலுவலர்கள் நமக்கு மீன்வளர்ப்பு
பயிற்சி அளித்து தொட்டிகள்
அமைக்கவும் உதவுவார்கள்.



ரொம்ப நன்றி அண்ணே!!! இப்ப நான்
உடனே மாவட்ட மீன்வள உதவி
இயக்குநர் அலுவலகத்திற்கு சென்று
இதற்கான நடவடிக்கைகளை
எடுக்கிறேண்ணே.





சரி முருகா… நீ போய்
அதற்கான வேலையை
பாரு நான்
கிளம்புகிறேன்….



வரேன் அண்ணே….





**மானியம் பெற தகுதியுடையவர்கள்**

பயனாளி மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் உறுப்பினராக சேர்ந்திருப்பது அவசியம்

**சமர்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம்
- திட்ட அறிக்கை (DPR)
- தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தின் நில ஆவணங்கள்
- ஆதார் அட்டை நகல்
- வங்கி கணக்கு புத்தக நகல்